மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) ஏற்கனவே மதுராந்தகம், உத்திரமேரூர் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் 31—1—1973 அன்று திறக்கப்பட்டுவிட்டன.

Tiruchirappalli as Corporation.

* 43 *Q.*—THIRU N. DENNIS THIRU P. SOUNDARAPANDIYAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Tiruchirappalli Municipal Council has requested the Government to upgrade the Municipality into a Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) திருச்சி நகர மக்கட்தொகையும் நகராட்சியின் வருவாயும், ஒரு மாநகராட்சியாவதற்கு வேண்டிய தகுதி பெற்று இருப்பதால், திருச்சி நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தக் கோரி, திருச்சி நகர் மன்றம் 10—5—1973-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, முனிசிபாலிட்டிகளை அப்கிரேட் செய்யும் விதத்தில் அவ்வப்போது பரிசீலனை செய்யப் படுகின்றதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பரிசீலனை செய்யப் பட்டுத் தான் உத்தரவுகள் அனுப்பப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கோரிக்கைக்கு எப் பொழுது முடிவெடுக்கப்படும்? அதில் ஸ்ரீரங்கத்தையும் சேர்க்க உத்தேசம் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தின் மக்கட்தொகையோடு பக்கத்திலே இருக்கிற திருவெறும்பூர் போன்ற பகுதிகளையும் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிருர்கள். மற்றவற்றையும், எதை எதை சேர்க்கலாம் என்பதைப் பற்றி இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை செய்யப்பட்ட பிறகு முடிவு அறிவிக்கப்படும்.

1973 ஆகஸ்ட் 6]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, திருச்சி முனிசிப்பல் நகரத்தை மாநகரமாக்குவதற்கு திருவெறும்பூர் போன்ற பகுதிகளையும் சேர்க்கவேண்டுமென்று திருச்சி நகர் மன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது சம்பந்தமாக ஏதாவது ஆட்சேபணைகளோ, புகார்களோ வந்திருக்கின்றனவா? அப்படி எதுவும் வரவில்லை யென்றால், அதை அடுத்த ஆண்டாவது துவங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, 10—5—1973-லே தான் தீர்மானமே நிறைவேற்றப்பட்டு அனுப்பப் பட்டிருக்கிறது. அவர்கள் திருவெறும்பூர் பகுதியை மாத்திர மல்ல, திருவரங்கம், பொன்மலை போன்ற பல பகுதிகளையும் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளை யெல்லாம் பரிசீலனை செய்து மற்றவர்களுடைய ஒப்புதல்களையும் பெற வேண்டியிருப்பதால், கொஞ்சம் காலதாமதம் இருக்கிறது.

திரு. ஆ. முனியாண்டி : வத்தலகுண்டை மாநகராட்சியாக்க வேண்டுமென்று செய்ற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அது எந்த நிலையிலே இருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இதற்கிடையிலே திருச்சி நகரசபையைக் கலைப்பதற்கு அரசு முயல்கிறது என்ற குற்றச்சாட்டு வருகிறதே, அப்படியிருந்தால், அந்நகரசபை கலைக்கப்பட மாட்டாது என்ற ஒரு உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, காரணமில்லாமல் எதுவும் கலைக்கப்பட மாட்டாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, திருச்சி கார்ப்பரேஷன் ஆகும்போது திருவரங்கத்தை சேர்த்துக் கொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, திருவரங்கம் நகரசபையினுடைய ஒப்புதலைப் பெறவேண்டும். வருமானம், மற்றவற்றைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்பவற்றையும் தெரிந்துகொண்ட பிறகு பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, திருச்சியை நகராட்சியாக்கும்போது, சென்னையிலே உள்ளது போல் ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது மேயர் தேர்ந்தெடுக்கப் படுவது போன்ற முறை பின்பற்றப்படுமா அல்லது மதுரையின் அடிச்சுவடு பின்பற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குழந்தை பிறந்ததற்குப்பிறகு பெயர் வைக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : திருவரங்கம் நகராட்சியிலிருந்து ஏற்கனவே ஒரு கோரிக்கை அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறதா? அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருச்சி நகராட்சியோடு இணைப்பதற்கு வேண்டிய தீர்மானத்தினை நிறைவேற்றியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதை அறிந்த பிறகு தெரிவிக்கிறேன்.

மதுரை மாநகர எல்லைகள்.

*44 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகர எல்லைகளை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம். பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதில் எந்த எந்தப் பகுதியை சேர்ப்பதாக உத்தேசம் என்று அறிய விரும்புகிறேன்.